1980 பிப்ரவரி 13]

காலங்களில் பாதிப்பு ஏற்படுகிறது. சர்க்கரை ஆலையிலிருந்து இரண்டு சிமெண்ட் பைப்தான் போட்டிருக்கிறார்கள். மழை காலங்களில் அது அடித்துச் செல்லப்பட்டுவிடுகிறது. இப்படிப் பட்ட சிரமங்களைப் போக்க உடனடியாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஒதுக்கப்பட்ட தொகை மூலமாக பல்வேறு சாலைப் பணிகள் எடுத்துக் கொள்ளப் பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சில சமயங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்படக்கூடிய நேரங்களில் அந்தப் பணி கள் தடைப்பட நேரிடுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய அந்தத் திட்டங்கள் எல்லாம் உடனடியாக செயல் படுத்துவதற்கான செயற் குறிப்பு இருக்கிறது. இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் அந்தப் பணிகள் தொடங்க இருக் கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பணகுடியிலுள்ள அரசு மருந்தகம்.

*வினா எண் 139—திரு. யா. சை. மு. யூசப்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் தொகுதி, பணக்குடியிலுள்ள அரசு மருந்தகத்தை மருத்துவமனையாக மாற்றும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது இத்திட்டம் நிறைவேற்றப் படும்?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்:

(அ) பணகுடி அரசு மருந்தகத்தை மருத்துவ மனையாக மாற்றும் திட்டம் தற்போது ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடம் இல்லை.

திரு. யா. சை. மு. யூசுப்: பணகுடியிலுள்ள அரசு மருந்தக மானது தனியாரால் உருவாக்கப்பட்டு, மாவட்ட ஆட்சிக் கழகத் திற்கு அதாவது டிஸ்ட்ரிக் போர்டுக்கு மாற்றப்பட்டு அங்கிருந்து ஊராட்சி ஒன்றியததிற்கு மாற்றப்பட்டு இப்போது அரசு மருந்தக மாக இயங்கி வருகிறது. டிஸ்ட்ரிக்ட் போர்டுக்குத் தரும் நேரத்தில் ஆறு படுக்கை வசதிகள் கொண்ட கட்டட வசதியுடன் தந்தார்கள். கழுதை தேய்ந்து கட்டெறும்பாவது போல் இப் போது படுக்கை வசதி இல்லாமல் புற நோயாளிகளை மட்டும் கவனிக்கும் மருந்தகமாகச் செயல்பட்டு வருகிறது. 20 ஆண்டு களுக்கு முன்னாலேயே படுக்கை வசதி கொண்டதாக இருந்த அந்த மருந்தகத்தை பத்து படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவ மனையாகவாவது உருவாக்க அரசு முன்வருமா?

[1980 பிப்ரவரி 13

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : இது ஏற்கனவே ஊராட்சி ஒன்றியத்தினுடைய மருந்தகமாக இருந்து இருக்கிறது. அதை அரசு 30—11—1975-ல் ஏற்றுக் கொண்டது. இதற்கு அருகில் 10 கிலோ மீட்டர் தூரத்தில் அரசு மருந்தகம் இருக்கிறது. நாங்குநேரியில் அரசு மருந்தகம் 25 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. அரசு தலைமை மருத்துவ மனை நாகர் கோவிலில் 24 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. மேலும் ஆறு படுக்கைகள் கொண்ட பிரசவ அறுவை சிகிச்சை கூடமும் புதிதாக ராதாபுரத்தில் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. ஆகவே, பணகுடியிலுள்ள அரசு மருந்தகத்தை மருத்துவமனையாக மாற்றத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-00]

திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வியிலே நான் கேட்டது, இருபது ஆண்டுகளுக்கு முன்பு அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் பெற்று வந்த வசதிகளைப் பெறுவார்களா என்பதுதான். ஆகவே பக்கத்திலே உள்ள இடங்களைப்பற்றிச் சொல்லாமல் அதிலே 6 படுக்கைகள் வசதியைச் செய்து கொடுப்பதற்கு அரசு ஏற்பாடுகளைச் செய்யுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தை எடுத்துக் கொண்ட போது என்ன வசதிகள் இருந்தனவோ அந்த வசதிகள் தற்போதும் இருந்து கொண்டிருக்கின்றன.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, மருந்தகங்களை, அரசு மருத்துவ மனைகளாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது ஒப்புக்கொள்ளப்பட்டு படிப்படியாகச் செய்யப்படவேண்டுமென்று இருக்கிறது. படிப்படியாகச் செய்யும் பொழுது பணக்குடியில் உள்ள மருந்தகத்தை அரசு மருத்துவ மனையாக பிரையாரிடி கொடுத்து மாற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, மருந்தகங்களை மருத்துவ மனைகளாக்க வேண்டும் என்ற திட்டம் அரசின் நடைமுறையில் இருந்து செயல்பட்டுக் கொண்டு வருகிறது. குறிப்பாக மருத்துவ மனைகள் இல்லாத இடங்களிலே அவைகளை மருத்துவ மனைகளாக ஏற்றுக்கொண்டு வருகிறோம் ; வசதிகளைப் பற்றிருக்கின்ற இடங்கள் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் எடுத்துக் கொள்ளப்படும்.

1980 பிப்ரவரி 13]

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, 60 ஆயிரம், 70 ஆயிரம் மக்கள் உள்ள நகராட்சிப் பகுதியிலே உள்ள மருந்தகங்களை மருத்துவ மனைகளாக மாற்றும் திட்டம் உண்டா? திருநெல்வேலி மாவட்டத்திலே புளியங்குடி என்ற கிராமத்திலே உள்ள மருந்தகத்தின் கட்டடம் உடைந்த கட்டடமாக இருக்கிறது .... (மணியடிக்கப்பட்டது).

மதுரை மாவட்டத்தில் மருத்துவமனைகளுக்கு ஆலோசனைக் குழுக்கள்.

*வினா எண். 140—திரு. நா. பழனிவேல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்ட மருத்துவமனைகளுக்கு ஆலோசனைக் குழு போடப்பட்டுள்ளதா ?

(ஆ) அக் குழுக்களில் எதிர்க்கட்சி சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கும் இடம் அளிக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) மதுரை மாவட்ட மருத்துவமனைகளுக்கு ஆலோசனைக் குழு போடப்படவில்லை.

(ஆ) இக் கேள்வி எழவில்லை.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, இதற்கு முன் பெல்லம் மருத்துவமனைகளுக்கு ஆங்காங்கு ஆலோசனைக் குழுக்கள் இயங்கிக் கொண்டு வந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இந்த ஆட்சி வந்து இரண்டரை ஆண்டுகள் ஆகியும் இன்னும் ஆலோசனைக் குழுக்கள் ஏன் போடப்படவில்லை என்பதை அறிந்துகொள்ள விரும்புவதோடு, அம்மாதிரிக் குழுக்களிலே சர்வ கட்சியினருக்கும் பிரதிநிதித்துவம் கொடுத்து அவைகள் அமைக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, அரசாணை (நிலை) எண். 1494, சுகாதாரம், நாள் 22—8—1978 மற்றும் அரசாணை (நிலை)எண். 64, சுகாதாரம், நாள் 14—1—1980-ல், திருத்தியமைக்கப்படவிருக்கும் மருத்துவ மனைகளின் ஆலோசனைக் குழுக்களில் கீழ்க்கண்டவர்கள் நியமிக்கப்பட வேண்டுமென உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. (1) மாவட்ட ஆட்சியாளர், (2) மாவட்ட குடும்ப நல தாய் சேய் நல அலுவலர், (3) முன்னாள் படை வீரர்கள் நலத்துறையின்